ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி
பொன்விழா ஆண்டு - (1974-2024)
(பல்கலைக்கழக மானியக் குழுவால் 'B' அங்கிகாரம் பெற்றது.)
பங்கஜம் நகர் - போடிநாயக்கனூர்
தேனி மாவட்டம் - 625513. தமிழ்நாடு, இந்தியா.

பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
இராமேஸ்வரம் - தமிழ்நாடு, இந்தியா.

ஒப்பீட்டு சமயம், சமூக நல்லுறவுத் துறை,
கிறித்தவத் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

ஆகியோர்
இணைந்து நடத்தும்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்
## International Conference

# "தமிழிலக்கியங்களில் மானுட வாழ்வியலும் மதிப்புகளும்"
# Human Ethics and Values in Tamil Literature

அறிவிப்பும் அழைப்பும்

## கருத்தரங்கம் நடைபெறும் நாள்: 23.08.2024

கட்டுரைகள் அனுப்ப கடைசி நாள்: 01.08.2024

நிகழிடம்
திரு. சுப்புராஜ் நினைவு குளிரரங்கம்
ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி
பங்கஜம் நகர் - போடிநாயக்கனூர்
தேனி மாவட்டம் - 625513. தமிழ்நாடு, இந்தியா.

அன்புடையீர் வணக்கம்,

எமது ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி உயர் கல்வியின் பயன் கிராமப்புற மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்கில் 1974 ஆம் ஆண்டு ஏல விவசாயிகள் சங்க அலுவலகக் கட்டிடத்தில்; மதுரை காமராசர் பல்கலைக்கழக அனுமதியுடன் இரண்டு பாடப்பிரிவுகளுடன் தொடங்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டு முதல் இக்கல்லூரி தற்போது இயங்கிவரும் இடத்தில் தனக்குச் சொந்தமான 43 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்து அமைந்துள்ளது. இந்தியாவிலேயே விவசாயிகளால் நடத்தப்படும் ஒரே கல்லூரி என்ற பெருமையுடன், மேற்குத் தொடர்ச்சிமலை அடிவாரத்தில்; மதுரை - மூணாறு தேசிய நெடுஞ்சாலையில் பசுமையான சூழலில் அமைந்துள்ளது. மேலும், இவ்வாண்டு தனது பொன்விழா (1974-2024) ஆண்டினைக் கொண்டாட தயாராகி வருகின்றது.

இக்கல்லூரியின் மணிமகுடமாக 2019-20 ஆம் ஆண்டு முதல் இளங்கலைத் தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவில் துவங்கப்பட்டு சீரிய முறையில் ஆசிரியப் பணியை மாணவச் சமுதாயத்திற்கு ஆற்றி வருகின்றது. மேலும், மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அரசு போட்டித் தேர்விற்குத் தயார்படுத்துதல், படைப்பாற்றலை வளர்த்தல், பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்கங்கள், சொற்பொழிவுகள், புத்தக வாசிப்பை ஊக்கப்படுத்த வியாழ வட்டம் போன்றனவற்றைச் சிறப்பாக நடத்தி வருகின்றது. எமது துறையில் 2020-21 ஆம் கல்வியாண்டில் 'கீழடியும் தமிழும்' என்ற தலைப்பிலும், 2021-22 ஆம் கல்வியாண்டில் 'பன்முகப் பார்வையில் பாரதி' என்ற தலைப்பிலும், 2022-23 ஆம் கல்வியாண்டில் 'தொல்லியல்: இலக்கியமும் வரலாறும்' என்ற தலைப்பில் கருத்தரங்கமும் நடத்தப்பட்டது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தற்போது **"தமிழிலக்கியங்களில் மானுட வாழ்வியலும் மதிப்புகளும்"** என்னும் பொருண்மையில் நடத்த இருக்கிறோம்.

பன்னெடுங்கால தொன்மையும் தொடர்ச்சியும் கொண்ட தமிழிலக்கியத்தில் மனிதவாழ்வின் மேன்மைகள் குறித்த சிந்தனைகள், தத்துவங்களாகவும் கலையாகவும், செயல்முறையாகவும் இடம்பெற்றுள்ளன. நடைமுறை வாழ்வில் மனிதர்கள் கடைபிடிக்க முற்படுகின்ற அறங்கள் அவர்களின் மதிப்பையும், மாண்பையும் உயர்த்துகின்றன. வாழ்வே இலக்கியமாக உருப்பெறுகின்ற தன்மையை தமிழிலக்கியங்கள் கொண்டுள்ளன. மன்னர்கள் ஆட்சியின் போதும் மக்களாட்சியின் போதும் இலக்கியங்கள் மனிதர்களைப் போற்றுகின்றன. மனித வளத்தையும், அற விழுமியங்களையும் குறித்துத் தொடர்ந்து போதனை செய்கின்றன. அற இலக்கியங்கள் மட்டுமின்றி தமிழில் தோன்றிய அனைத்து வகைமை இலக்கியங்களிலும் மனித அறமே விஞ்சி நிற்கின்றது என்பர் மானுடநேய அறிஞர்கள். மனிதத் தன்மைதான் உலகில் அழியாச் செல்வமாக நிலைத்து நிற்கும் என்பதால்தான் போரொழிந்த வாழ்வை மக்கள் விரும்பினார்கள். அடுதலும் தொடுதலும் கால வகையினான எனக் கூறப்பட்டாலும் மாந்தர்தம் பசி தீர்த்தலை தலையாயக் கடமையாகக் கொண்ட ஆபுரத்திரனும் மணிமேகலையும் காப்பிய மாந்தர்களாக மனிதர்களுக்கு வழி காட்டுகின்றனர். அத்தகைய நேயமிக்க தமிழிலக்கியம் இன்றைக்கும் நுண்மையான கதைக் களங்களைத் தேர்ந்தெடுத்து வெளிப்படுத்தி வருகின்றன. சிக்கலான சமூகமாக இன்றைய சமூகம் காணக் கிடைக்கின்றது. போர்களை ஆராதிக்கும் மனநிலை, வன்முறையை வரவேற்கும் மனநிலை ஆகியன மனித நேயத்தை வறட்சியடையச் செய்வனவாகும். தமிழ் இலக்கியங்கள் போற்றி வளர்த்த மானுட நேயமும் மனித விழுமியங்களும் தற்காலச் சமூகத்தினரிடம் துளிர்விட வேண்டும் என்பதை இக்கருத்தரங்கப் பொருண்மை நோக்கமாகக் கொள்கிறது. மானுட வாழ்வியலைப் பற்றிப் படர்ந்துள்ள பல்வேறு கருத்துக் களங்களைப் கட்டுரைகள் களமாகக் கொள்ளலாம். விழுமியங்களையும் மதிப்புகளையும் வெளிப்படுத்தும் வகையினவாக கட்டுரைகள் அமைதல் நலம். ஆய்வாளர்களும், பேராசிரியர்களும் இலக்கிய ஆர்வலர்களும் கட்டுரைகள் அளிக்கலாம். கருத்தரங்கத்தில் கட்டுரை வாசித்தளித்தல் என்பது மனிதநேய மாண்பினை உணர்த்தும் ஓர் அரிய செயல் என்பதால் கட்டுரைகளைக் கருத்தரங்க நாளன்று வாசித்தளிக்க வேண்டுகிறோம்.

## I. கட்டுரைகள் அமையப்பெறும் முறை

1. கட்டுரைகள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் மட்டுமே இடம்பெற வேண்டும்.
2. தமிழ் கட்டுரைகள் யுனிகோடு எழுத்துருவில் 1.5 இடைவெளியுடன் M.S.Word இல் தட்டச்சு செய்யப்பட்டு 5-8 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். ஆங்கிலக் கட்டுரைகள் Times New Roman எழுத்துருவில் 12 Size 1.5 இடைவெளியுடன் தட்டச்சு செய்யப்பட்டு 5-8 பங்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும்.
3. ஆய்வுக்கட்டுரைகள் ஆய்வு முறைகளைப் பின்பற்றி எழுதப்பட்டிருக்க வேண்டும்.
4. சொந்த படைப்பாக இருத்தல் வேண்டும்.
5. கட்டுரையின் இறுதியில் துணைநூற்பட்டியல் (ஆசிரியர் பெயர், நூலின் பெயர், பதிப்பக முகவரி, ஆண்டு என்ற அமைப்பில்) இடம்பெறுதல் வேண்டும். நூல் குறிப்புகள் அருகிலேயே (கவிஞர் சிற்பி, 2010, ப.78 என்ற அமைப்பில்) இடம்பெறுதல் வேண்டும்.
6. கட்டுரைகள் முன்னுரை, விவாதம், முடிவுரை ஆகியனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## II. கட்டுரையாளர்கள் கவனத்திற்கு

1. ஆய்வுக்கட்டுரைகள் மின்னஞ்சல் வழியில் சொற்கோப்பில் அனுப்ப வேண்டும்.
2. கட்டுரைகளை திருத்தவோ, நீக்கவோ பதிப்புக்குழுவினருக்கு அதிகாரம் உண்டு.
3. ஆய்வுக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டு ISBN எண்ணுடன் ஆய்வுக்கோவையாக கருத்தரங்க நாளன்று வெளியிடப்படும். கட்டுரைத் தலைப்பின் கீழ் கட்டுரையாளரின் முழுப் பெயர் மற்றும் முகவரி இடம்பெறுதல் வேண்டும்.
4. கட்டுரையாளர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டு தங்களது கட்டுரைகளை வாசித்தல் வேண்டும்.
5. நூல், சான்றிதழ் ஆகியன கருத்தரங்க நாளன்று கட்டுரையாளர்களுக்கு வழங்கப்படும்.
6. கருத்தரங்கில் கலந்து கொள்ள இயலாதவர்களுக்கு நூல், சான்றிதழ் ஆகியன அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும். வர இயலாதவர்கள் கட்டுரைக்கான கட்டணத்துடன் ரூ.150 சேர்த்து அனுப்ப வேண்டும்.

கருத்தரங்க நாள் : 23.08.2024

கருத்தரங்கத்திற்கான கட்டுரைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 01.08.2024

### கட்டுரையாளர்களுக்கான கட்டணம்

| | |
|---|---|
| பேராசிரியர்கள், ஆர்வலர்கள் | - ரூ. 1000 |
| ஆய்வாளர்கள் | - ரூ, 700 |
| வெளிநாட்டவர்கள் | - $ 15 USD |

### கட்டுரைகள் அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி

**tamilsf@cpacollege.org**

### கட்டுரையாளர்கள் கட்டுரைக்கான கட்டணத்தை

Indian Overseas Bank
N.PALPANDI
A/cNo.270301000002169
IFSC:IOBA0002703
Theni Palanichettipatti Branch.

என்ற வங்கிக் கணக்கிலும் 9698051050 என்ற Gpay எண்ணிலும் பணம் அனுப்பலாம்.

## கருத்தரங்கக் குழுவினர்

### கருத்தரங்கப் புரவலர்கள்

திரு. சோ.வே.சுப்பிரமணியன்., தலைவர்
திரு. ரா.புருஷோத்தமன் ., M.A.,B.Ed., - செயலாளர்
திரு. சு.ராமநாதன்., M.A., - உபதலைவர்
ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி
போடிநாயக்கனூர்.

முனைவர் இரா.இரமேஷ்குமார்,
முதல்வர் (மு.கூ.பொ) பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
இராமேஸ்வரம்.

### கருத்தரங்க இயக்குநர்

முனைவர் சு.சிவக்குமார்.,
முதல்வர், ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி,
போடிநாயக்கனூர்.

முனைவர் வ. குணபாலசிங்கம்
புலத் தலைவர்,கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

### கருத்தரங்கத் தலைமை

முனைவர் சு.பாலமுருகன்.,
துணை முதல்வர், ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி

பேரா.சீ.சுரேஷ்குமார்.,
ஒருங்கிணைப்பாளர் (சுயநிதிப்பிரிவு),
ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி,போடிநாயக்கனூர்.

திரு அ. கண்ணோராஜ்
துறைத்தலைவர்,
ஒப்பீட்டு சமயம் சமூக நல்லுறவுத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

திரு. வே.பாஸ்கரன்,
தமிழ்த்துறை,பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

### கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர் க.காளிஸ் பிரபு,
தமிழ்த்துறை,
பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இராமேஸ்வரம்.

முனைவர் நா. பால்பாண்டி
தலைவர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு),
ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி,
போடிநாயக்கனூர் - தேனி மாவட்டம்.

அருள்பணி அ. அ. நவரெத்தினம்
இணைப்பாளர், கிறித்தவத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### கருத்தரங்க இணை ஒருங்கிணைப்பாளர்கள்

பேரா. சே.மாசிலாமணி
முனைவர் வி.வெள்ளைச்சாமி
திரு க. மதிசீலன்
முனனவர் பா.அங்கயற்கண்ணி
முனைவர் மு.செல்வி
திரு இ. சகாயசீலன்
பேரா. க.தனலட்சுமி
திரு.செ.கண்ணதாசன்
திரு பே.சச்சிதானந்தம்
பேரா.பெ.ரேணுகாதேவி
முனைவர் த.திருமுருகன்
முனைவர் ஜெ.ஜென்சிதா

### கருத்தரங்கத் தொடர்பிற்கு

முனைவர் கா. காளிஸ் பிரபு, 9944929723
முனைவர் நா. பால்பாண்டி, 9698051050
திரு.சோ.அறிவுமணி 9789148851